தினமணி

# வணிக நோக்கில் செயல்படும் வேளாண் பயிர்க் காப்பீட்டு நிறுவனம்

- த. முருகானந்தம் -

First Published : 20 Dec 2011 03:34:05 AM IST



தஞ்சாவூர், டிச. 19,: இந்திய வேளாண் பயிர்க் காப்பீட்டு நிறுவனம் வணிக நோக்கில் செயல்படுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

சாகுபடி பருவங்கள் கடந்தும் இழப்பீடு வழங்காமல் தாமதம் செய்வது, காப்பீடு செய்தவர்களில் நான்கில் ஒரு பங்கினருக்கு மட்டும் இழப்பீடு தருவது வாடிக்கையாகி வருகிறது.

இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிடும் உத்தரவாத மகசூல் முறைகளில் நிலவும் குளறுபடிகளால், உண்மையாக பாதிக்கப்பட்ட பல விவசாயிகள் பலன்பெற இயலாமல் போய்விடுகின்றனர்.

குறுவை, சம்பா, தாளடி நெல் பருவங்கள் முடிந்தும் இதுவரை 2010-11ஆம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டுத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. அதற்குள், நிகழாண்டிற்கான காப்பீட்டுத் தொகையைச் செலுத்தும் காலக்கெடு முடிவுறப் போகிறது.

கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்வதற்கான காலக்கெடு டிசம்பர் 15-ம் தேதியோடு முடிந்துவிட்டது. ஒருவேளை, கடன் பெறாத விவசாயிகள் கடந்த ஆண்டு மகசூல் இன்றி வருவாய் இழப்பிற்கு ஆளாகியிருந்தால், காப்பீட்டுத் தொகை கிடைக்காமல் நிகழாண்டு சாகுபடி செலவிற்கு அதிகம் சிரமப்பட்டிருப்பார்கள்.

கடன் பெற்ற விவசாயிகள் டிசம்பர் 31-ம் தேதிக்குள் காப்பீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டும். அவர்களும் கடந்த ஆண்டு மகசூல் நஷ்டத்திற்கு ஆளாகியிருந்தால் கடன் சுமையுடன், நிகழாண்டு சாகுபடி செலவுகளையும் ஏற்றிருக்க வேண்டும்.

இந்த நிலையில், பயிர்க் காப்பீட்டுத் தொகை கிடைக்காமல் கடன் சுமையையும், சாகுபடி செலவுகளையும் எத்தனை விவசாயிகளால் தாங்கியிருக்க முடியும்? அடுத்ததாக, காப்பீட்டு பிரிமியம் செலுத்திய, மகசூல் இழந்த அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு கிடைக்கும் என்கிற நிச்சயமும் கிடையாது. இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்க நடத்தப்படும் பயிர் அறுவடை சோதனைகளில் நிலவும் குளறுபடிகள்தான் இதற்குக் காரணம்.

கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட மகசூல் சராசரியை கணக்கிடுகின்றனர். அந்த சராசரி மகசூலைவிட நிகழாண்டில் குறையும் அளவுக்கு ஏற்ப காப்பீட்டில் இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த சராசரி மகசூல் கணக்கீட்டிற்காக முன்பு வட்டார அளவில் 18 இடங்களில் பயிர் அறுவடை சோதனை நடத்தப்படும். அதாவது, கிராமங்களுக்கு 2 இடங்களில் இந்தச் சோதனை நடைபெறும்.

தற்போது, இந்தச் சோதனை 7 அல்லது 8 கிராமங்கள் அடங்கிய ஒரு பிர்காவிற்கு 10 இடங்கள் என்ற அளவில் குறைக்கப்பட்டுவிட்டது. இதனால், முழுமையான மகசூல் இழப்பைக் கணக்கிட முடியாது என்பது விவசாயிகளின் வாதம். கிராமங்கள்தோறும் 10 இடங்களில் பயிர் அறுவடை சோதனை நடத்தினால்தான் உண்மையான மகசூல் இழப்பீட்டை கணக்கிட முடியும் என்கின்றனர் விவசாயிகள்.

தற்போதுள்ள அறுவடை சோதனைகளால் மகசூல் பாதிக்கப்பட்டவர்களை முழுமையாகக் கணக்கிட முடியாது என்பதால்தான், 7.50 லட்சம் விவசாயிகள் காப்பீடு செய்தும், அவர்களில் 2.25 லட்சம் பேருக்கு மட்டுமே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட உள்ளதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

காவிரி டெல்டா மாவட்டங்களிலேயே சுமார் 10 வருவாய் வட்டங்களுக்கு மட்டுமே நிகழாண்டு பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து இந்திய வேளாண்மை பயிர்க் காப்பீட்டு நிறுவனத்தின் சென்னை மண்டல மேலாளர் அன்பரசன் கூறியது:

நெல் பயிருக்கான காப்பீட்டுத் தொகை ரூ. 209 கோடி நிர்ணயிக்கப்பட்டு, மத்திய, மாநில அரசுகளின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. பிர்கா அளவில் மேற்கொண்ட பயிர் அறுவடை சோதனைகளின் அடிப்படையில், உத்தரவாத மகசூல் கணக்கிடப்பட்டு இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எந்தெந்தப் பகுதிக்கு இழப்பீடு கிடையாது என்பதை இப்போது கூற முடியாது. ஆனால், காப்பீடு செய்த அனைவருக்கும் இழப்பீட்டுத் தொகை என்பது கிடையாது. இன்னும் ஓரிரு நாள்களில் இழப்பீட்டுத் தொகை, பயனாளிகள் விவரம் அறிவிக்கப்பட்டுவிடும் என்றார் அன்பரசன்.

ஒவ்வொரு தனிப்பட்ட விவசாயியின் நஷ்டத்தையும் முழுமையாக ஈடுசெய்வதாக பயிர்க் காப்பீட்டுத் திட்டம் அமைய வேண்டும். அவ்வாறு இல்லாமல், வணிகரீதியில் இந்திய அரசு வேளாண் பயிர்க் காப்பீட்டு நிறுவனம் செயல்படத் தொடங்கினால், அது விவசாயத்தின் ஆணிவேரையே அழித்துவிடும் என்கின்றனர் காவிரி டெல்டா விவசாயிகள்.

"விவசாயத்தில் இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்'

First Published : 19 Dec 2011 03:49:22 PM IST

திருவாரூர், டிச. 18: விவசாயத்தில் இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இளைஞர்களை வேளாண் தொழிலில் ஈடுபடுத்தினால் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும் என்றார் தமிழக உணவுத் துறை அமைச்சர் ஆர். காம்ராஜ்.

திருவாரூர் மாவட்ட வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) சார்பில், விவசாயிகளுடனான கலந்துரையாடல் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவாரூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் பல்வேறு துறைகள் சார்பில் 8,405 பயனாளிகளுக்கு ரூ. 2.45 கோடியில் நலத் திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் பேசியது:

நமது நாடு விவசாயம் சார்ந்த நாடு. ஏறத்தாழ 80 சத மக்கள் விவசாயத்தை நம்பியே உள்ளனர். குறிப்பாக, திருவாரூர் மாவட்டம் விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் எதுவுமே இல்லாத மாவட்டம்.

விவசாயத் தொழில் மட்டுமே முற்றிலுமாக இயற்கையை சார்ந்துள்ள தொழில். இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் போது முதலில் பாதிப்பு ஏற்படுவது விவசாயிகளுக்குத்தான்

விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரை அண்டை மாநிலங்களிலிருந்து பெறுவதில் அதிமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் தமிழக முதல்வர் ஜெயலலிதா வழக்குமன்றத்துக்குச் சென்றாவது நமது உரிமையை நிலைநாட்டி வருகிறார்.

நிகழாண்டிலும் வழக்கத்துக்கு மாறாக ஜூன் 6-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டதால், குறுவையில் அதிக அளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களது குழந்தைகளை படிக்க வைக்கும் அதேநேரத்தில் விவசாயத்திலும் அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

விவசாயத்தில் மிகப் பெரிய சாதனைகள் புரிய இளைஞர்களுக்கு வாய்ப்பளித்து, ஊக்கப்படுத்த வேண்டும். விவசாயத்தில் இளைஞர்கள் ஈடுபடும் போது மிகப் பெரிய மாற்றம், ஏற்றம் ஏற்படும் என்றார் காம்ராஜ்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் தலைமை வகித்தார். மாநில திட்டக் குழு உறுப்பினர் (வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்) கே. ராமசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவகனி, மாவட்ட ஊராட்சித் தலைவர் அ. ஜெயலட்சுமி, திருவாரூர் நகர்மன்றத் தலைவர் வி. ரவிச்சந்திரன், முன்னோடி விவசாயி மன்னார்குடி எஸ். ரங்கநாதன், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பி.ஆர். பாண்டியன், நெடுவை டி. ராஜதுரை, எஸ். கிருஷ்ணமணி உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

விழாவில் ஒன்றியக் குழுத் தலைவர்கள் பாப்பா சுப்பிரமணியன் (குடவாசல்), சம்பத் (நன்னிலம்), மலர் மணிகண்டன் (திருவாரூர்), நகர்மன்றத் தலைவர்கள் டி. சுதா (மன்னார்குடி), ஜயராஜ் (கூத்தாநல்லூர்), வேளாண் இணை இயக்குநர் எஸ். மயில்வாகணன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**"விவசாயத்தில் இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்'**

First Published : 19 Dec 2011 03:49:22 PM IST

திருவாரூர், டிச. 18: விவசாயத்தில் இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இளைஞர்களை வேளாண் தொழிலில் ஈடுபடுத்தினால் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும் என்றார் தமிழக உணவுத் துறை அமைச்சர் ஆர். காம்ராஜ்.

திருவாரூர் மாவட்ட வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) சார்பில், விவசாயிகளுடனான கலந்துரையாடல் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவாரூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் பல்வேறு துறைகள் சார்பில் 8,405 பயனாளிகளுக்கு ரூ. 2.45 கோடியில் நலத் திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் பேசியது:

நமது நாடு விவசாயம் சார்ந்த நாடு. ஏறத்தாழ 80 சத மக்கள் விவசாயத்தை நம்பியே உள்ளனர். குறிப்பாக, திருவாரூர் மாவட்டம் விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் எதுவுமே இல்லாத மாவட்டம்.

விவசாயத் தொழில் மட்டுமே முற்றிலுமாக இயற்கையை சார்ந்துள்ள தொழில். இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் போது முதலில் பாதிப்பு ஏற்படுவது விவசாயிகளுக்குத்தான்

விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரை அண்டை மாநிலங்களிலிருந்து பெறுவதில் அதிமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் தமிழக முதல்வர் ஜெயலலிதா வழக்குமன்றத்துக்குச் சென்றாவது நமது உரிமையை நிலைநாட்டி வருகிறார்.

நிகழாண்டிலும் வழக்கத்துக்கு மாறாக ஜூன் 6-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டதால், குறுவையில் அதிக அளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களது குழந்தைகளை படிக்க வைக்கும் அதேநேரத்தில் விவசாயத்திலும் அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

விவசாயத்தில் மிகப் பெரிய சாதனைகள் புரிய இளைஞர்களுக்கு வாய்ப்பளித்து, ஊக்கப்படுத்த வேண்டும். விவசாயத்தில் இளைஞர்கள் ஈடுபடும் போது மிகப் பெரிய மாற்றம், ஏற்றம் ஏற்படும் என்றார் காம்ராஜ்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் தலைமை வகித்தார். மாநில திட்டக் குழு உறுப்பினர் (வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்) கே. ராமசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவகனி, மாவட்ட ஊராட்சித் தலைவர் அ. ஜெயலட்சுமி, திருவாரூர் நகர்மன்றத் தலைவர் வி. ரவிச்சந்திரன், முன்னோடி விவசாயி மன்னார்குடி எஸ். ரங்கநாதன், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பி.ஆர். பாண்டியன், நெடுவை டி. ராஜதுரை, எஸ். கிருஷ்ணமணி உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

விழாவில் ஒன்றியக் குழுத் தலைவர்கள் பாப்பா சுப்பிரமணியன் (குடவாசல்), சம்பத் (நன்னிலம்), மலர் மணிகண்டன் (திருவாரூர்), நகர்மன்றத் தலைவர்கள் டி. சுதா (மன்னார்குடி), ஜயராஜ் (கூத்தாநல்லூர்), வேளாண் இணை இயக்குநர் எஸ். மயில்வாகணன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**"விவசாயத்தில் இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்'**

First Published : 19 Dec 2011 03:49:22 PM IST

திருவாரூர், டிச. 18: விவசாயத்தில் இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இளைஞர்களை வேளாண் தொழிலில் ஈடுபடுத்தினால் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும் என்றார் தமிழக உணவுத் துறை அமைச்சர் ஆர். காம்ராஜ்.

திருவாரூர் மாவட்ட வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) சார்பில், விவசாயிகளுடனான கலந்துரையாடல் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவாரூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் பல்வேறு துறைகள் சார்பில் 8,405 பயனாளிகளுக்கு ரூ. 2.45 கோடியில் நலத் திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் பேசியது:

நமது நாடு விவசாயம் சார்ந்த நாடு. ஏறத்தாழ 80 சத மக்கள் விவசாயத்தை நம்பியே உள்ளனர். குறிப்பாக, திருவாரூர் மாவட்டம் விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் எதுவுமே இல்லாத மாவட்டம்.

விவசாயத் தொழில் மட்டுமே முற்றிலுமாக இயற்கையை சார்ந்துள்ள தொழில். இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் போது முதலில் பாதிப்பு ஏற்படுவது விவசாயிகளுக்குத்தான்

விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரை அண்டை மாநிலங்களிலிருந்து பெறுவதில் அதிமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் தமிழக முதல்வர் ஜெயலலிதா வழக்குமன்றத்துக்குச் சென்றாவது நமது உரிமையை நிலைநாட்டி வருகிறார்.

நிகழாண்டிலும் வழக்கத்துக்கு மாறாக ஜூன் 6-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டதால், குறுவையில் அதிக அளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களது குழந்தைகளை படிக்க வைக்கும் அதேநேரத்தில் விவசாயத்திலும் அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

விவசாயத்தில் மிகப் பெரிய சாதனைகள் புரிய இளைஞர்களுக்கு வாய்ப்பளித்து, ஊக்கப்படுத்த வேண்டும். விவசாயத்தில் இளைஞர்கள் ஈடுபடும் போது மிகப் பெரிய மாற்றம், ஏற்றம் ஏற்படும் என்றார் காம்ராஜ்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் தலைமை வகித்தார். மாநில திட்டக் குழு உறுப்பினர் (வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்) கே. ராமசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவகனி, மாவட்ட ஊராட்சித் தலைவர் அ. ஜெயலட்சுமி, திருவாரூர் நகர்மன்றத் தலைவர் வி. ரவிச்சந்திரன், முன்னோடி விவசாயி மன்னார்குடி எஸ். ரங்கநாதன், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பி.ஆர். பாண்டியன், நெடுவை டி. ராஜதுரை, எஸ். கிருஷ்ணமணி உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

விழாவில் ஒன்றியக் குழுத் தலைவர்கள் பாப்பா சுப்பிரமணியன் (குடவாசல்), சம்பத் (நன்னிலம்), மலர் மணிகண்டன் (திருவாரூர்), நகர்மன்றத் தலைவர்கள் டி. சுதா (மன்னார்குடி), ஜயராஜ் (கூத்தாநல்லூர்), வேளாண் இணை இயக்குநர் எஸ். மயில்வாகணன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**இயற்கை வேளாண்மையால் பொருட்களுக்கு "மவுசு' :மகாராஷ்டிர வேளாண் விஞ்ஞானி நம்பிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2011,01:12 IST

பொள்ளாச்சி : ""இயற்கை வேளாண் தொழிற்நுட்பத்தை கையாண்டால் தான், உலக சந்தையில், விளைபொருட்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும்,'' என, வேளாண் விஞ்ஞானி நம்பிக்கை தெரிவித்தார். பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபை சார்பில், "ஜீரோ பட்ஜெட்' இயற்கை வேளாண்

கருத்தரங்கு, பாலக்காடு சாலையிலுள்ள மின்னல் மகாலில் நேற்று துவங்கியது. கருத்தரங்கு தலைவர் ஆனந்தகுமார் வரவேற்றார். பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபை தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். வேளாண் துறை அமைச்சர் தாமோதரன், கருத்தரங்கை துவக்கி வைத்தார். பொள்ளாச்சி நகராட்சி தலைவர் கிருஷ்ணகுமார், பொள்ளாச்சி எம்.எல்.ஏ., முத்துகருப்பண்ணசாமி, உடுமலை எம்.எல்.ஏ., ஜெயராமன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் பாஸ்கரன் பேசினர். மகாராஷ்டிர மாநில வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கர் பேசியதாவது: பிரதமர் மன்மோகன்சிங், மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்ப, உணவு உற்பத்தியை அதிகரிக்க, நம்மிடம் எந்த தொழிற்நுட்பமும் இல்லை என கூறியுள்ளார். அரிசி, கோதுமை உற்பத்தியில், நாடு தன்னிறைவு பெற்றிருப்பதாக அரசு அறிவிக்கிறது; இருப்பினும், 165 டன் கோதுமையை, சர்வதேச சந்தையில் இருந்து இறக்குமதி செய்கிறோம். விவசாய உற்பத்திக்கு, ரசாயன உரங்களை பயன்படுத்தினால், உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படாது. பசுமைப் புரட்சி மாநிலமான பஞ்சாப்பில், 30 ஆண்டுகளுக்கு முன், ஒரு ஏக்கரில் 30 குவிண்டால் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது, 10 குவிண்டால் மட்டுமே உற்பத்தியாகிறது. ரசாயன உரங்களை பயன்படுத்தி, உணவு உற்பத்தியை இரு மடங்கு அதிகரிக்க திட்டமிட்டனர்; ஆனால், ரசாயன வேளாண்மையால், அனைத்து தொழிற்நுட்பமும் தோல்வி அடைந்தது. ரசாயன, ஆர்கானிக் வேளாண்மை தொழிற்நுட்பம், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை; இந்த தொழிற்நுட்பத்தால், நாட்டின் பொருளாதாரம், இயற்கை வளம் சுரண்டப்படுகிறது; இதனால், இந்திய விவசாயிகளின் பொருளாதாரம் பாதிக்கும்; இவை, இரண்டுக்கும் மாற்றாக, "ஜீரோ பட்ஜெட்' இயற்கை வேளாண் முறையை கையாள வேண்டும். இம்முறையில், 30 ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ள, ஒரு நாட்டு மாடு இருந்தால் போதும். ரசாயனம், ஆர்கானிக் முறையை விட, இயற்கை வேளாண் முறையில் அதிக மகசூல் கிடைக்கும். பயிர்களுக்கு பூச்சி மருந்து, நிலத்தை உழவு செய்வது போன்றவை தேவையில்லை. செலவில்லாத இந்த தொழிற்நுட்பத்தை பயன்படுத்த, நீர் மற்றும் மின்சாரம் தலா 10 சதவீதம் மட்டுமே தேவைப்படும்; இம்முறையில் விளைவிக்கப்படும் விளைப்பொருட்கள், விஷத்தன்மை அற்றதாக இருப்பதால், உலக சந்தையில் கூடுதல் விலை கிடைக்கும். இந்த தொழிற்நுட்பத்தை விவசாயிகள் கையாண்டால் தான், இயற்கை வேளாண் புரட்சியை ஏற்படுத்த முடியும். இவ்வாறு, சுபாஷ் பலேக்கர் பேசினார்.

**வேளாண் பல்கலையில் புதிய சாப்ட்வேர் பயன்பாடு துவக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,23:20 IST

கோவை : வேளாண் பல்கலையில் தேர்வு மேலாண்மை முறை, மின்னணு வழி ஆளுகை எனும் இரண்டு புதிய சாப்ட்வேர் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டுள்ளன.தேர்வு கட்டுப்பாட்டாளர் சந்திரசேகரன், பல்கலை உயர் அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகள்

முன்னிலையில், வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி இவ்விரு சாப்ட்வேர்களின் பயன்பாட்டினை துவக்கி வைத்தார்.தேர்வு மேலாண்மை முறை மென்பொருளானது கம்யூட்டருடன் நேரடியாய் ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்பான, இணையதள வசதி கொண்ட புதுமைவாய்ந்த முறை. இதன் மூலம் கடந்த 2010ம் ஆண்டு முதல் இளமறிவியல், மூதறிவியல், முனைவர் பட்டப்படிப்பு, திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி பயின்ற மாணவர்களின் கோப்புகள் கணிணிமயமாக்கப்படும்.இதில், கணினி தொடர்பு மூலம் மாணவர்கள் பாடப்பதிவு மற்றும் அவற்றினை கல்லூரி முதல்வர்கள் கண்காணித்து ஒப்புதல் அளித்தல், மாணவர்கள் பதிவு செய்வதில் காலதாமதம் தவிர்ப்பு மற்றும் காகிதமற்ற தகவல் பரிமாற்றம், இடைப்பருவ தேர்வு, செய்முறை தேர்வு மதிப்பெண்கள் மற்றும் வருகைப் பதிவு ஆகியன நேரடியாக ஆசிரியர்களால் இணையம் மூலம் அனுப்பப்படுதல், ஒரே நேரத்தில் பலர் பயன்படுத்தும் எளிய அமைப்பு முறை உள்ளிட்ட அம்சங்கள் உள்ளன.மின்னணுவழி ஆளுகை மென்பொருளானது, தொகுப்பு மதிப்பெண் பட்டியல் விண்ணப்பம்,கேள்வித்தாள் தயாரிப்பு, விடைத்தாள் மதிப்பீடு மற்றும் செய்முறை தேர்வுகளுக்கான வெளித்தேர்வாளர்கள் நியமித்தல் போன்ற பல பணிகளுக்கென உருவாக்கப்பட்டுள்ளது.இதில், தொகுப்பு மதிப்பெண் பட்டியல் பெற மாணவர்கள் நேரடி விண்ணப்பம் மற்றும் விண்ணப்ப நிலை பற்றி மாணவர்களுக்கு கைபேசியில் குறுந்தகவல்கள் வழங்குதல், கேள்வித்தாள் தயாரிப்பவர்களுக்கு காலக்கெடு பற்றிய நினைவூட்டல், வெளித்தேர்வாளர்களை தேர்வு கட்டுப்பாட்டாளர் நேரடியாக தேர்வு செய்து அனுப்புதல், தேர்வுத்தாள்கள் திருத்தப்பட்ட விவரங்கள் அறிதல் உள்ளிட்ட அம்சங்கள் உள்ளன.இவ்விரு சாப்ட்வேர்களும் தானியங்கி செயலுக்காக மட்டுமின்றி, வெளிப்படையான நிர்வாகத்திற்கும் வழிவகுக்கும் என்பதால் பயன்படுத்தப்படுகிறது.

**கரும்பு சாகுபடியாளர்கள் வரும் 22ல் கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,23:02 IST

மடத்துக்குளம் : மடத்துக்குளம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் சார்பாக கரும்பு சாகுபடியாளர்கருத்தரங்கு உடுமலையில் வரும் 22ம் தேதி நடக்கிறது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு, உற்பத்தியில் ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கம் வழங்க ஆலை நிர்வாகம் மற்றும் இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் சார்பாக கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உடுமலை ஐஎம்ஏ ஹாலில் 22ம் தேதி காலை 10.00 மணிக்கு நடக்கும் நிகழ்ச்சியில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் ஆனந்தி

மற்றும் இப்கோ மாநில விற்பனை மேலாளர் கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். விவசாயிகள் பங்கேற்று பயன் பெறலாம்.

**விளை பயிர்களை "ருசி' பார்க்கும் காட்டுப்பன்றிகள் :விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,23:02 IST

உடுமலை : உடுமலை அருகே விளை பயிர்களை "ருசி' கண்ட காட்டுப்பன்றிகள் மீண்டும் வன எல்லைக்குள் செல்ல தயக்கம் காட்டி வருகிறது. இதனால், விவசாயிகள் கலக்கமடைந்து வருகின்றனர். மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தையொட்டி அமைந்துள்ள ஜல்லிபட்டி கொங்குரார் குட்டை பகுதி வன எல்லை அருகே அமைந்துள்ளது. இதனால், அவ்வப்போது, காட்டுப்பன்றிகள் விளைநிலங்களுக்குள் படையெடுத்து, மா, தேங்காய்களை பதம் பார்த்து வருகின்றன.விவசாயிகள் கூறியதாவது:காட்டுப்பன்றிகள் அவ்வப்போது இரவு நேரங்களில் வந்து விளை பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. இப்பகுதியிலுள்ள தேங்காய், மாங்கனிகளையும் "ருசி' பார்க்கிறது. எந்த பயிர் சாகுபடி மேற்கொண்டாலும் காட்டுப்பன்றிகள் பதம் பார்க்காமல் விடாது. விளைநிலத்திற்குள் வரும் காட்டுப்பன்றிகள் 100 வரை கூட்டமாக வந்து தங்களது பசி தீர பயிர்களை பதம் பார்த்த பின் காலையில், வன எல்லைக்குள் சென்று விடும். ஆனால், தற்போது, பயிர்களை "ருசி' கண்ட காட்டுப்பன்றிகள் வன எல்லைக்குள் செல்லாமல், ஓடைகளையொட்டி தங்களது கூடாரத்தை அமைத்து வருகிறது. அங்கேயே தங்கி இனப்பெருக்கம் மேற்கொள்கிறது. காட்டுப்பன்றிகள் தங்களது பசியை தீர்த்துக்கொள்ள விளைநிலங்களுக்கு படையெடுப்பதே வழக்கமாகி கொண்டுள்ளதால், நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. இரவு நேரங்களில், சுதந்திரமாக சுற்றித்திரியும் காட்டுப்பன்றிகளால், தோட்டத்துச்சாலைகளில் வசிப்பவர்கள் நிம்மதியின்றி தவித்து வருகின்றனர். எனவே, வனத்துறையினர் விளைநிலங்களுக்குள் காட்டுப்பன்றிகள் படையெடுக்காமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். வனத்துறை யோசனை உடுமலை வனச்சரக அலுவலர் தங்கராஜ் பன்னீர் செல்வம் கூறியதாவது: விளை பயிர்களின் "ருசி', மற்றும் தேவையான உணவு எளிதாக கிடைப்பதால், காட்டுப்பன்றிகள் விளைநிலங்களுக்குள் படையெடுகின்றன. விளைநிலங்களுக்குள் புகாமல் தடுக்க வனத்துறை சார்பில், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேதமடைந்த பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. காட்டுப்பன்றிகள் உள்ளிட்ட வன விலங்குகள் விளைநிலங்களுக்குள் புகாமல் தடுக்கும் வகையில், கள்ளிச் செடிகளை பயிரிடலாம். கள்ளிச்செடி வேலிகள் அமைத்தால், வனவிலங்குகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியும்,' என்றார்.

தினகரன்

**உருளைகிழங்கு விலை பிப்ரவரியில் அதிகரிக்கும்**

பதிவு செய்த நாள் : 12/20/2011 12:29:33 AM



கோவை : உருளைகிழங்குக்கு பிப்ரவரியில் அதிக விலை கிடைக்கும் என்று வேளாண்மை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் 2010&11ல் உருளைகிழங்கு 18.95 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 402 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்தாண்டை ஒப்பிடும் போது உற்பத்தி 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதியில் மட்டுமே உருளைகிழங்கு பயிரிடப்படுகிறது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, 2010&11ல் தமிழ்நாட்டில் 4600 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு, 97,200 டன் உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் முக்கிய உருளைகிழங்கு சந்தையான மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய 21 ஆண்டு உருளை கிழங்கு விலைகள் ஆய்வு செய்யப்பட்டது. இதன்படி, உருளை கிழங்கின் விலை தற்போது கிலோவுக்கு ரூ.14 முதல் ரூ.16 வரையும், அடுத்த ஆண்டு ஜனவரியில் கிலோவுக்கு ரூ.15 முதல் ரூ.17 வரை கிடைக்கும் என

கணக்கிடப்பட்டுள்ளது. பிப்ரவரியில் சுமார் ரூ.19 முதல் ரூ.20 வரை விலை கிடைக்க வாய்ப்புள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கோலார் உருளைகிழங்கு வரத்து பிப்ரவரியில் குறைய வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் டிசம்பரில் அறுவடையாகும் உருளைகிழங்கை சேமித்து வைத்து ஜனவரி, பிப்ரவரியில் விற்றால் அதிக விலை கிடைக்கும்என்று அறிக்கைதெரிவிக்கிறது.

**சர்க்கரை உற்பத்தி 19% உயர்வு**

பதிவு செய்த நாள் : 12/20/2011 12:28:53 AM



புதுடெல்லி: நடப்பு 2011&12 சீசனில் (அக்டோபர்&செப்டம்பர்) டிசம்பர் 15ம் தேதி வரையிலான சர்க்கரை உற்பத்தி 19 சதவீதம் அதிகரித்து 45.8 லட்சம் டன்னானது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இது 38.6 லட்சம் டன்னாக இருந்தது. உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் நம்நாடு 2ம் இடமும், நுகர்வில் முதலிடமும் வகிக்கிறது. நடப்பு சீசனில் சாதகமான சூழல் நிலவியதால் சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. டிசம்பர் 15 வரையில் மகாராஷ்டிராவில் சர்க்கரை உற்பத்தி 17.5 லட்சம் டன்னாகவும், உத்தர பிரதேசத்தில் 12.8 லட்சம் டன்னாகவும், கர்நாடகாவில் 8.2 லட்சம் டன்னாகவும் அதிகரித்தது.

4 மாதத்தில் பணவீக்கம் 7 சதவீதமாக குறையும்

பதிவு செய்த நாள் : 12/20/2011 12:27:11 AM



பெங்களூர் : அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நாட்டின் பொது பணவீக்கம் 6 முதல் 7 சதவீதத்துக்குள் வரும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்தார். பெங்களூரில் நேற்று கூறியதாவது: நாட்டின் பொது பணவீக்கம் தொடர்ந்து அதிகமாக நீடிப்பதை ஒப்புக் கொள்கிறேன். இரட்டை இலக்கத்தை ஒட்டியே இருக்கும் அதை, குறைக்கும் நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. பணவீக்கம் அதிகரிப்பது அரசின் கவலைக்குரிய விஷயம்.

எனினும், பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக இப்போது பணவீக்கம் குறையும் அறிகுறி தென்படுகிறது. இந்த நிலை அடுத்த சில மாதங்களுக்கு நீடிக்கும். அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் பொது பணவீக்கம் 6 முதல் 7 சதவீதத்துக்குள் வரும் என்று நம்புகிறேன். உற்பத்தி, எரிபொருள் உட்பட சில துறைகளில் பணவீக்கம் அதிகமாக நீடித்தாலும் உணவு பணவீக்கம் குறைந்து வருவது ஆறுதல் அளிக்கிறது. டிசம்பர் 3ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உணவு பணவீக்கம் 4 ஆண்டுகளில் இல்லாத அளவாக 4.35 சதவீதமானது. முந்தைய வாரத்தில் அது 6.6 சதவீதமாக இருந்தது.

---

தினத் தந்தி DAILY THANTHI

**வங்கக்கடலில் குறைந்தழுத்த தாழ்வுநிலை தமிழ்நாட்டில் இன்று சில இடங்களில் மழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு**

சென்னை, டிச.20–
வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி உள்ளது. இதன்காரணமாக தமிழ்நாட்டில் இன்று சில இடங்களில் மழைபெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

கூடுதல் மழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெரும்பாலான இடங்களில் போதிய அளவுக்கு பெய்துள்ளது. கடலூர், கோவை, திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தேனி, திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி, திருச்சி, விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் சராசரியை விட அதிகமாக அளவுக்கு மழை பெய்துள்ளது. சென்னை உள்ளிட்ட மற்ற மாவட்டங்களில் சராசரி அளவுக்கு மழை பெய்துள்ளது.
தமிழ்நாட்டில் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் வரை 43 செ.மீ.மழை சராசரியாக பெய்யும். ஆனால் இதுவரை 50 செ.மீ. மழை பெய்துள்ளது. சென்னையில் சராசரி அளவு மழை பெய்துள்ளது.
இன்னும் வடகிழக்கு பருவமழை காலம் முடியவில்லை. அது டிசம்பர் இறுதி வரை உள்ளது. சில வருடம் ஜனவரி 5–ந் தேதி வரை நீடித்திருக்கிறது.

தீபத்திற்கு பிறகு மழை இல்லை

ஆனால் திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்ட பிறகு கனத்த மழை இல்லை என்பதை கார்த்திகைக்கு பிறகு மழையும் இல்லை கர்ணனுக்கு பின் கொடையும் இல்லை என்பது பழமொழியாகும்.
அதேபோலவே திருக்கார்த்திகைக்கு பிறகு தமிழ்நாட்டில் மழை பெய்யாமல் இருந்தது. மழைக்கு பதிலாக பனி பெய்து வந்தது. இந்த நிலையில் வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்தழுத்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அதன்காரணமாகவும் வளிமண்டலத்தின் மேல் அடுக்கு காற்று சாதகமாக இருப்பதால் நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்துள்ளது.
இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

இன்று மழை பெய்யும்

இலங்கை அருகே வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி உள்ளது. அதன் காரணமாகவும், வளிமண்டல மேல்அடுக்கு காற்று சாதகமாக இருப்பதாலும் தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் சில இடங்களிலும், வடதமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும் இன்று (செவ்வாய்க்கிழமை) மழைபெய்யும். தென் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனத்த மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது. சென்னையில் மழையை எதிர்பார்க்கமுடியாது.
இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8–30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் ராமேஸ்வரத்தில் 11 செ.மீ.மழையும், பாம்பனில் 9 செ.மீ.மழையும், ராமநாதபுரத்தில் 5 செ.மீ.மழையும், முதுகுளத்தூர், ஆர்.எஸ்.மங்கலம், தொண்டி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ.மழையும் பெய்துள்ளது.

**தேசிய சராசரியை விட, மேற்கு மாநிலங்களில் தேயிலை பயன்பாடு அதிகரிப்பு**

சுதானுகா கோசல்
கொல்கத்தா

இந்தியாவின் மேற்கு மாநிலங்களில் தேயிலை பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதனால் ஏற்றுமதியை சார்ந்திராமல் உள்நாட்டு வர்த்தக வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள தேயிலை உற்பத்தி நிறுவனங்கள் தயாராகி வருகின்றன.

தனிநபர் பயன்பாடு

தேசிய அளவில் தனிநபர் தேயிலை பயன்பாடு 733 கிராமாக உள்ளது. அதே சமயம் இது மேற்கு மாநிலங்களில் 900 கிராமாக அதிகரித்துள்ளது. தேயிலைத் துறை நிறுவனங்களின் தீவிர முயற்சியால் எதிர்வரும் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இந்த மண்டலத்தில் தனிநபர் பயன்பாடு 1000 கிராமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பயன்பாடு தற்போது 2.5 சதவீத அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. இது 3 முதல் 3.5 சதவீதம் வரை உயர்ந்தால் தனிநபர் பயன்பாடு சராசரியாக 1000 கிராமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் காமன்வெல்த் குடியரசுகள் இந்தியாவிலிருந்து அதிக அளவில் தேயிலை இறக்குமதி செய்து வருகின்றன. இந்த நாடுகளில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக தேயிலை இறக்குமதியை குறைத்திருந்தன. தற்போது இந்நாடுகள் இயல்பு நிலைக்கு திரும்புவதால் இந்நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதி மீண்டும் அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

பொதுவாக, இந்த நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதி 9 கோடி கிலோவாக உள்ளது. இருப்பினும் நடப்பு ஆண்டின் முதல் 10 மாதத்தில் 14.50 கோடி கிலோவாக சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்றுமதி 16.31 கோடி கிலோவாக இருந்தது. தேயிலை பயன்பாடு சிறப்பாக அதிகரித்து வரும் நிலையில் தரத்தினை மேம்படுத்தி வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்ள விரும்புவதாக மேக்லியோடு ரஸ்ஸல் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.